அரசியலமைப்பின் 153(இ) பிரிவின் படி, ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளாக அமைச்சரவையால் முறையாக வகுக்கப்பட்ட கொள்கைகளுக்கு உட்பட்டு, இலங்கை அரச கணக்காய்வு சேவைக்கு உரித்தான அங்கத்தவர்களின் சேவைக்கு ஆட்சேர்க்கப்பு நடைமுறை, நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பணிநீக்கம் தொடர்பான விதிகள் தயாரிக்கப்பட்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் படிமுறைகள் பின்பற்றப்பட்டு குறித்த அங்கீகாரங்கள் பெறப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ் விதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறை நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச கணக்காய்வுப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிலையமொன்றை உருவாக்கி நிலையத்தின் முகாமைத்துவத்திற்கு உரிய விதிகளைத் தயாரித்தல்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி மற்றும் கணக்காய்வு தொடர்பான துறையில் மனிதவளத் திறனை மேம்படுத்தும் நோக்கில் கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வுப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று உருவாக்கப்பட வேண்டிய போதிலும் நிலையத்தின் முகாமைத்துவத்திற்கு உரித்தான விதிகள் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட வேண்டியமை தொடர்பாகக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பயிற்சிகளும் அபிவிருத்தி நிலையமும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் உருவாக்கப்பட்டிராமையால் இதற்கு உரித்தான

விதிகள் தயாரிக்கப்படுவதற்காக தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவிற்கு செயற்பட இயலாதிருந்தது.

(இ) சட்ட நடவடிக்கைகள்

இலங்கை அரச கணக்காய்வு சேவையின் சேவைக் குறிப்பு தொடர்பாகவும் அதனோடிணைந்த விடயங்களுக்கு உரித்தாகவும் 2024 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு சேவை ஆணைக்குழு பிரதிவாதியபாக்கப்பட்டு உயர் நீதிமன்றத்தில் 03 அடிப்படை உரிமை வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அந்த சட்ட நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விசாரணை நிலையில் உள்ளன.

(ஈ) நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பு

இலங்கை அரச கணக்காய்வு சேவையை ஸ்தாபிக்கப்பட முன்னர் சேவைகளுக்கு உரித்தான அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பு அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 12 மேன்முறையீடுகள் நிர்வாக மேன்முறையீட்டு தீர்ப்பு அதிகாரசபையில் விசாரணை நிலையில் உள்ளன.

(உ) சேவை நிரந்தரமாக்குதல்

முன்னைய சேவைக் குறிப்புகளுக்கு உரிய வகையில் இலங்கை அரச கணக்காய்வு சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் 73 கணக்காய்வு உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு இயலுமா என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக கோரப்பட்டு அதற்கான தீர்மானத்தை விரைவாகப் பெற்றுத்தருமாறு ஆணைக்குழுவால் கோரப்பட்டு சட்டமா அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் வரை சேவை நிரந்தரமாக்கப்படும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

**4.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அலுவலக உபகரணக் கொள்வனவு

2024 ஆம் ஆண்டின் போது 12 அலுவலக உபகரண விடயங்கள் பல்வேறு எண்ணிக்கையில் கொள்வனவு செய்யப்படுவதற்காக 02 தனியார் கம்பனிகளுக்கு ரூபா 2,127,074 (வரியுடன்) செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறை விதிகளின் 6.3.6 ஆம் பந்தியின் படி, ஏலங்களைத் திறப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த படிவத்தில் ஏலங்களின் நிதி விவரங்கள் குறிப்பிடப்படாமல் ஏலங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) இந்த பெறுகைக்கான ஏல ஆவணத்தில் ஓர் நிபந்தனையாக தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனரால் பெறுகை வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் குறித்த பொருள் ஆணைக்குழுவிற்கு அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், குறித்த காலஎல்லைக்குள் பொருட்களை வழங்காத வழங்குனரால் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் பெறுகை வழங்கப்பட்ட தொகையில் இருந்து 0.05 சதவீதம் தாமதக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும், அறவிடப்படும் அதிகபட்ச தாமதக் கட்டணம் பெறுகைப் பெறுமதியில் 10 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு உரித்தான பொருள் கோரல் 2024 யூலை 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், பொருள் பெறுவனவுப் பத்திரம் வழங்கப்படாது 2024 ஆகஸ்ட் 01, 06, 20 மற்றும் 2024 செப்டம்பர் 09 ஆம் திகதிய இன்வொய்ஸ்களில் குறித்த வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் படி, பொருட்கள் வழங்கப்படும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தாமதக் கட்டணம் அறவிடப்படும் நிபந்தனை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஈ - ஜீபீ முறைமையூடாக ஷொப்பிங் முறையின் கீழ் பெறுகை மேற்கொள்ளல்.

இலங்கையில் அரச இலத்திரனியல் பெறுகை முறைமை செயற்படுத்தப்படுவது தொடர்பாக விநியோகிக்கப்பட்டிருந்த 2024 பெப்ரவரி 06 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. 08/2019 (i) மற்றும் 2019 (ii) இன் மூலம் 2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய இல. 08/2019 (i) மற்றும் 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய

08/2019 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு கவனம் ஈர்க்கப்பட்டு, ஷொப்பிங் முறையின் கீழ் பொருட்களின் பெறுகைக்காக ஈ - ஜீபீ முறைமை விருத்தி செய்யப்பட்டிருந்தமையாலல் அரச பெறுகை நிறுவகம் மற்றும் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் ஈ - ஜீபீ முறைமையின் பதிவு, வழங்குனர் பதிவு, வருடாந்த பெறுகை விளம்பரத்தை வெளிப்படுத்தி பெறுகையை வழங்குதல், ஈ - ஜீபீ முறைமையூடாக மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவால் 2024 ஆம் ஆண்டின் போது ஷொப்பிங் முறையின் கீழ் 24 சந்தர்ப்பங்களின் போது ரூபா 8,287,646 தொகையான பொருட்களின் பெறுகைகள் ஈ - ஜீபீ முறைமைப் பயன்படுத்தாது மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2024 பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் 2026 பெப்ரவரி 14 ஆம் திகதி வரையான 02 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக 3000 கி.மீ. வரையறைக்குள் மாதாந்த வாடகை ரூபா 318,600 தொகை (பெறுமதி சேர் வரியுடன்) வான் ஒன்று இயக்க குத்தகை அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு பெறப்பட்டிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் போது இவ் வாகனத்தின் சராசரி மாதாந்த ஓட்டம் 793 கிலோ மீற்றின மிகக் குறைந்த அளவில் நிலவியது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 சாரதிகளுக்கான நியமனம் இருந்த போதிலும், ஒரு சாரதி மட்டுமே ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டிருந்த போதிலும் அந்தச் சாரதியும் 2025 பெப்ரவரி மாதம் முதல் கடமைக்குச் சமூகமளித்திராமையால் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த இக் குழாம் வான் 2025 பெப்ரவரி மாதம் முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிராததுடன் குத்தகை வாடகையாக மாதாந்தம் ரூபா 318,600 தொகையான பணம் செலுத்தப்பட்டு வாகனம் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. நிரந்தர சாரதி ஒருவர் பெறப்படும் வரையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவதற்காக 2025 மே 20 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) 2017 ஜுன் 26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யப்படும் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்களை தொடர்புடைய காலாண்டின் இறுதியில்

கொம்ரோலர் ஜனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வு சேவை ஆணைக்குழு இதன் படி செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் மூலதன செலவின விடயங்கள் இரண்டின் பாதீடடப்பட்ட ஏற்பாட்டின் கூட்டுத்தொகை ரூபா 15,000,000 தொகையான பெறுகை ஏற்பாட்டில் காணப்படும் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,720,000 தொகையான வேறுபாடு நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(உ) சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படுதல்

I. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட் பதிவேடும் CIGAS முறைமையிலுள்ள நிலையான சொத்துக்களின் கீழான BOS Report அறிக்கையுடன் ஒப்பிடுகையில் 12 சொத்து விடயங்களுக்கு உரித்தான 26 சொத்துக்களின் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

II. CIGAS முறைமைக்கும் பொருள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சொத்து விடயங்களின் பெயரிடலுக்கும் ஒன்றுடனொன்று இணங்காமை காரணமாக CIGAS முறைமையூடாகப் பெறப்படும் அறிக்கைகள் பொருள் பதிவேட்டுடன் ஒப்பிடுகையில் சிக்கல் ஏற்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

III. 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக பயன்படுத்தப்பட்ட CIGAS BOS அறிக்கையின் படி, அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ஆகிய இரண்டு தலைப்புகளின் கீழும் 21 UPS பொருட்கள் இரட்டைக் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகிய இரண்டு தலைப்புகளின் கீழும் 16 பார்வையாளர் நாற்காலிகளும் இரட்டைக் கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தமையால் இரண்டு மடங்காகக் கணக்கெடுக்கப்பட்டிருந்தன.

IV. CIGAS கணினி முறைமையால் உருவாக்கப்பட்ட சொத்து குறியீடுகளை பௌதீக ரீதியாக சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்பட்டிராத காரணத்தால் சொத்துக்களை அடையாளம் கண்டு தேவையான சந்தர்ப்பங்களின் போது சொத்துக்கள் முறையாக அகற்றப்படுவதற்கும் பொருள்

மெய்மையாய்வின் போது சொத்துக்களின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் தடையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 மனிதவள அபிவிருத்தி திட்டம்

2023 நவம்பர் 30 ஆம் திகதிய 02/2018(I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை இணைப்பு I முதல் X வரையான மாதிரிப் படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவால் 2024 ஆம் ஆண்டிற்கு உரித்தான மனித வளத் திட்டம் அப் படிவங்களின் படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

(அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் ஒட்டு மொத்த வெற்றிட எண்ணிக்கை 33 ஆகும். அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையில் 68 சதவீதம் ஆகும். இந்த வெற்றிட எண்ணிக்கையில் சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்களும் மூன்றாம் நிலையில் 04 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையில் 15 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 08 வெற்றிடங்களும் நிலவின.

(ஆ) ஆட்சேர்ப்பு செயல்முறையின் படி நிரந்தர சேவைக்கு நியமிக்கப்படுவதற்குப் பதிலாக, 06 சிரேஷ்ட நிலையில் 03 வெற்றிடங்களுக்காக பதில் கடமை மேற்கொள்ளப்படும் அடிப்படையில் மூன்று உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இரண்டாம் நிலையில் 03 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இத்தகைய வெற்றிடங்கள் நிலவுவது ஆணைக்குழுவின் செயல்திறனைப் பாதிக்குமாயின், எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு அல்லாவிடின் ஈடுபடுத்தப்பட்ட பதவியணியைச் சீராக்குவது ஏற்றதாகும்.

# 4. செயலாற்றல் குறிகாட்டிகள்

**நிர்வாக பிரிவின் முன்னேற்றம்**

| சிறப்புக் குறிகாட்டிகள் | எதிர்பார்த்த பூர்த்தியின் சதவீதமாக | | |
|---|---|---|---|
| | 100 % – 90 % | 89 %– 75 % | 50% – 74 % |
| தனியாள் கோவை நாளதுவரையாக்கப்பட்டு பேணல் | ✓ | | |
| நிறுவகத்தின் அறிக்கை தயாரித்தல் | ✓ | | |
| தகவல் அறியும் சட்டத்திற்கு ஏற்ப செயற்படுதல் | ✓ | | |
| உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குதல் | ✓ | | |
| ஏனையவை – அலுவலக அடையாள அட்டை தயாரித்தல், புகையிரத ஆணைச்சீட்டு மற்றும் புகையிரத அனுமதிப்பத்திரம், அக்ரஹார காப்புறுதி நலன் | ✓ | | |

**கணக்குப் பிரிவின் முன்னேற்றம்**

| சிறப்புக் குறிகாட்டிகள் | எதிர்பார்த்த பூர்த்தியின் சதவீதமாக | | |
|---|---|---|---|
| | 100 % – 90 % | 89 %– 75 % | 50% – 74 % |
| செயற்திறனான நிதி நிர்வாகம் மற்றும் துல்லியமான கணக்குகள் | ✓ | | |
| துல்லியமான அறிக்கையிடல் | ✓ | | |
| நிதி சொத்துக்களின் உகந்த பயன்பாடு | ✓ | | |

**நியமனங்கள்/பதவி உயர்வுகள்/ஒழுக்காற்றல் பிரிவின் முன்னேற்றம்**

| **சிறப்புக் குறிகாட்டிகள்** | **எதிர்பார்த்த பூர்த்தியின் சதவீதமாக** | | |
|---|---|---|---|
| | **100 % – 90 %** | **89 %– 75 %** | **50% – 74 %** |
| இலங்கை அரச கணக்காய்வு சேவையில் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு | ✓ | | |
| இலங்கை அரச கணக்காய்வு சேவை அதிகாரிகளின் சேவை உறுதிப்படுத்தல் | ✓ | | |
| இலங்கை அரச கணக்காய்வு சேவை அதிகாரிகளின் தர ரீதியான பதவி உயர்வு. | ✓ | | |
| இலங்கை அரச கணக்காய்வு சேவை அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் மேன்முறையீடுகள | ✓ | | |
| இலங்கை அரச கணக்காய்வு சேவை அதிகாரிகளின் ஓய்விற்கான ஒப்புதல் பெற்றுக்கொள்ளுதல் | ✓ | | |
| மிகைக்கட்டண மேல்முறையீடுகள் தொடர்பாகச் செயற்படுதல் | | | |

## 5. நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைவதிலான செயலாற்றல்

## 5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான வளர்ச்சி இலக்குகள் மற்றும் முன்னேற்றம்

| தொடர் இல. | குறிக்கோள | இலக்கு | சாதனை குறிகாட்டி | ஏய்தப்பட்ட முன்னேற்றம் | | | குறித்த பிரிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% | |
| **01** | **8.** அனைவருக்கும் பூரணமான, முழுமையான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சி, முழுமையான மற்றும் ஆக்கபூர்வமான திறன் கொண்ட வேலைவாய்ப்பை மேம்படுத்துதல் | 8.2 நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான அரசாங்க சேவையை உருவாக்குதல் | நிறுவகத்தின் மனித வளங்களின் ஆக்கத்திறனை அதிகரிக்க நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | | ✓ | **மனித வள அபிவிருத்தி** |
| | | | சர்வதேச அறிவுள்ள அதிகாரிகள் குழுவை உருவாக்க நிறுவகத்தின் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால/நீண்ட கால பயிற்சிகளின் எண்ணிக்கை. | | | ✓ | |
| **02** | 12. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல் | 12.7 தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப நிலைபேறான பொதுமக்கள் மீள்வழங்கல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக நிறுவகத்தில் உள்ள வளங்களை முழுத் திறனுடன் பராமரித்தல். | கொள்முதல் நடவடிக்கைகளுக்காக பாதீட்டு நிதிப் பயன்பாட்டு சதவீதம் | | | ✓ | **கணக்கு** |

| தொடர் இல. | குறிக்கோள | இலக்கு | சாதனை குறிகாட்டி | ஏய்தப்பட்ட முன்னேற்றம் | | | குறித்த பிரிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% | |
| 03 | 16. நிலைபேறான வளர்ச்சிக்காக அமைதியான மற்றும் உள்ளீர்க்கப்பட்ட சமூக மேம்பாடு மற்றும் அனைவருக்கும் நியாயத்திற்கான வழி வழங்குதல் மற்றும் பொறுப்புணர்வான மற்றும் உள்ளீர்க்கப்பட்ட நிறுவகத்தை உருவாக்குதல் | 16.6 அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையாக விருத்தி செய்தல் | குறித்த காலத்தில் பாதீட்டு மதிப்பீட்டைத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் | | | ✓ | கணக்கு |
| | | | பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல். | | | ✓ | கணக்கு |
| | | | பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் முன்பண பீ கணக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல். | | | ✓ | கணக்கு |
| | | | அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் படி, குறித்த தினத்தில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் | | | ✓ | கணக்கு |
| | | 16.7 சகல நிலைகளிலும் பதிலளிக்கக்கூடிய சகலரையும் உள்ளடக்கிய, பங்கேற்புடன் பிரதிநிதித்துவ முடிவெடுக்கும் செயல்முறையை உறுதி செய்தல். | நிறுவனத்தில் ஆண், பெண் ரீதியாகவும் வயதின் அடிப்படையில் நிறைவேற்றுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அளவு | | | ✓ | நிர்வாகம் |
| | | | நிறுவனத்தில் ஆண், பெண் ரீதியாகவும் வயதின் அடிப்படையில் நிறைவேற்றுத்தரமல்லாத பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள அளவு | | | ✓ | நிர்வாகம் |
| | | 16.10 தேசிய சட்ட முறைமைக்கு இணங்க பொதுமக்களுக்கு தகவலைப் அறியும் உரிமையை உறுதி செய்து திறமையான மற்றும் வெளிப்படையான அரசாங்க சேவையைப் பராமரித்தல் | தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்படும் கோரிக்கை எண்ணிக்கை | | | ✓ | நிர்வாகம் |
| | | | பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களில் தீர்ப்பதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | | | ✓ | நிர்வாகம் |

# 6. மனித வள விபரம்

## 6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்தும்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள்/ (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 10 | 04 | 06 |
| மூன்றாம் நிலை | 5 | 1 | 04 |
| இரண்டாம் | 21 | 6 | 15 |
| ஆரம்பம் | 12 | 04 | 08 |
| | **48** | **15** | **33** |

| கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவி எண்ணிக்கை மற்றும் 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினரினதும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல் | | | | |
|---|---|---|---|---|
| **பதவி வகை** | **பதவி** | **அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை** | **சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
| சிரேஷ்ட நிலை | செயலாளர் | 01 | 01 | 06 |
| | மேலதிக செயலாளர் | 01 | 01 | |
| | சிரேஷ்ட உதவி செயலாளர் | 01 | 01 | |
| | பணிப்பாளர் | 01 | 01 | |
| | உதவிப் பணிப்பாளர் | 01 | 0 | |
| | உதவிச்செயலாளர் | 02 | 0 | |
| | கணக்காளர் | 01 | 0 | |
| | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 0 | |
| | சட்ட உத்தியோகத்தர் (திணைக்களம் சார்) | 01 | 0 | |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | 04 |
| | மொழிபெயர்ப்பாளர் | 03 | 0 | |
| | தகவல் பரிமாற்று தொழிநுட்ப உத்தியோகத்தர் | 01 | 0 | |
| இரண்டாம் நிலை | தகவல் பரிமாற்று தொழிநுட்ப உதவியாளர் | 01 | 0 | 15 |
| | முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் | 15 | 05 | |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 05 | 01 | |
| ஆரம்ப நிலை | சாரதி சேவை | 05 | 0 | 08 |
| | அலுவலக பணி உதவியாளர் சேவை | 07 | 04 | |
| **கூட்டுத்தொகை** | | 43 | 15 | 33 |

## 6.2 நிறுவனத்தின் செயற்திறனிற்கு மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகையின் தாக்கம்

கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச ஊழியர்கள் இல்லாது செயற்பட வேண்டியமை, செயற்திறனான செயற்பாடுகளை மேற்கொள்வதில் பாதிப்புகள் ஏற்படவும், நிறுவகச் செயல்பாடுகளின் வெளிப்படைத்தன்மை, துல்லியத்தன்மை மற்றும் தரத்திற்கும் தாக்கம் ஏற்படலாம்.

இருப்பினும், மேற்கண்ட நிலைகளை தவிர்த்துக்கொள்வதற்காக மாற்றீடாக, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 6.3 மனித வள விருத்தி

| தொடர் இல. | நிகழ்ச்சி | பயிற்றுவிக்கப் பட்ட பதவியணி அங்கத்துவ எண்ணிக்கை | நிகழ்ச்சியின் கால எல்லை | மொத்த முதலீடு (ரூபா) | | நிகழ்ச்சி தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு | பூர்த்தி /பெறப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாடு | வெளி நாடு | | |
| 01 | தொழிற்துறை ஆங்கில டிப்ளோமா பாடநெறி | 02 | 01 வருடம் | 184000/= | | உள்நாட்டு | நிறுவகத்தின் நோக்கங்களை அடைய சிறந்த சேவை வழங்கலுக்கான திறன்களை மேம்படுத்துதல். |
| 02 | தாபனவிதிக் கோவையும் நடைமுறை விதியும் | 10 | 01 நாள் | | | உள்நாட்டு | |
| 03 | செயலக நடைமுறைப் பயிற்சி | 01 | 04 நாட்கள் | 25000/= | | உள்நாட்டு | |
| 04 | ஒழுக்காற்று நடைமுறைப் பயிற்சி | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 05 | அலுவலக உதவியாளர் மற்றும் சாரதிப் பயிற்சி | 03 | 02 நாட்கள் | 39000/= | | உள்நாட்டு | |
| 06 | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பெறுகைச் செயன்முறை | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 07 | அலுவலக கடித வடிவமைப்பு | 03 | 01 நாள் | 21000/= | | உள்நாட்டு | |
| 08 | பெறுகை நடைமுறை | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 09 | உள்ளகக் கணக்காய்வு செயல்முறை | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 10 | அரசாங்க நிதிப் பிரமாணங்கள் | 01 | 01 நாள் | 7000/= | | உள்நாட்டு | |
| 11 | நடைமுறை அலுவலக அமைப்புகள் மற்றும் முகாமைத்துவம் | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 12 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மற்றும் சொத்து கைதவிர்ப்பு | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 13 | சம்பள பரிமாற்றம் | 02 | 02 நாட்கள் | 26000/= | | உள்நாட்டு | |
| 14 | அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தல் | 01 | 01 நாள் | 7000/= | | உள்நாட்டு | |
| 15 | அலுவலக ஊழியர் சோவையின் பொறுப்பு | 03 | 02 நாட்கள் | 39000/= | | உள்நாட்டு | |
| 16 | கணக்கியல் முறை மற்றும் இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் | 01 | 02 நாட்கள் | 13000/= | | உள்நாட்டு | |
| 17 | முன்பண பீ கணக்குகள் தயாாரிப்பு | 01 | 01 நாள் | 7000/= | | உள்நாட்டு | |
| 18 | காமைத்துவ சேவை அலுவலர் முதல் தர அதிகாரிகளுக்கு பத்து நாட்கள் சேவைக்காலப் பயிற்சி. | 01 | 10 நாட்கள் | | | உள்நாட்டு | |
| 19 | அரச கரும மொழித் தமிழ் பாடநெறி - மூன்றாம் நிலை | 03 | 14 நாட்கள் | | | **உள்நாட்டு** | சிறந்த சேவைகளை வழங்க மொழித் திறனை மேம்படுத்துதல். |

## 07. இணக்க அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக உற்பத்தி முன்பணக் கணக்கு (வணிக முன்பணக் கணக்கு) | | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | ஏனையவை | இணக்கமானது | | |
| 2 | புத்தகப் பதிவேடுகள் பராமரிப்பு (நி.பி. 445) | | | |
| 2.1 | பொது நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுதல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | சுகல மாதாந்த கணக்குப் பொழிப்பு (CIGAS) தயாரிக்கப்பட்டு குறித்த தினத்தில் திறைசேரிக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | நிதிக் கட்டுப்பாட்டிற்காக பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய இல. 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி, அரசாங்க சம்பள மென்பொருள் பயன்படுத்தப்படுகையில் கணக்காளர்களின் கட்டுப்பாட்டிற்குள் செயற்படுதல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 4 | வருடாந்த திட்டத்தைத் தயாரித்தல் | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD)குறித்த தினத்தில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை குறித்த தினத்தில் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | கணக்காய்வு ஐயவினாக்கள் | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் குறிப்பிடப்பட்ட தினத்தில், சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 6 | உள்ளகக் கணக்காய்வு | | | |
| 6.1 | நி.பி.134(2) டீஎம்ஏ/1-2019 இன் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்சுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 (4) உப பிரிவின் பிரகாரம், சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல். | இணக்கமானது | | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 7. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | | | |
| 7.1 | டீஎம்ஏ சுற்றறிக்கையின் 1-2019 இன் பிரகாரம் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்படுதல். | 2024.12.18 ஆம் திகதி ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது | | 2025 ஆம் ஆண்டில் குறித்த வகையில் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 8 | சொத்துக்கள் முகாமைத்துவம் | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் பெறுகை மற்றும் அகற்றல் தொடர்பாக கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் ஏற்பாடுகளை செயற்படுத்துதல், ஒருங்கிணைத்தல் தொடர்பாக ஏற்ற ஒருங்கிணைத்தல் உத்தியோகத்தரை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்களை கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அறிவித்தல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை 05/2016 இன் பிரகாரம், பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு குறித்த அறிக்கை குறித்த தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 8.4 | வருடாந்த பொருள் மெய்மையாய்வின் மூலம் கண்டறியப்பட்ட மிகை மற்றும் ஏனைய பரிந்துரைப்புகள் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளப்பட்டிருந்தமை | இணக்கமானது | | |
| 8.5 | கழிக்கப்பட்ட பொருட்களின் அகற்றல் நி.பி.772 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளப்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 9. | வாகன முகாமைத்துவம் | | | |
| 9.1 | குழாம் வாகனத்திற்காக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு குறித்த தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாத காலத்திற்குள் அகற்றப்படல் வேண்டும். | | | கழிக்கப்பட்ட வாகனங்கள் இல்லை |
| 9.3 | வாகனச் சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டு அவை நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும். | | | பொருத்தமற்றது |
| 9.4 | சகல வாகன விபத்துக் குறித்தும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் | | | விபத்து ஏற்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் | | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு குறித்து மீள் பரிசோதித்தல். | | | |
| 9.6 | குத்தகைக் கால எல்லையின் பின்னர் குத்தகை வாகனங்களின் சம்பவக் குறிப்பேடுகளில் முழுமையான உரித்து பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல். | | | முாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்கள் மாத்திரமே உள்ளன. |
| 10. | வங்கிக் கணக்குகளின் முகாமை | | | |
| 10.1 | குறித்த தினத்தில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு அவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுதல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வாண்டின் போது அல்லது இதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் இருந்து கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு அம் மீதி ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| | | | | |
| 11 | நிதி ஏற்பாட்டுப் பயன்பாடு | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகள் மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாட்டு வரம்பை மீறாத வகையில் பொறுப்புகளிற்கு உட்படுதல். | இணக்கமானது | | |
| 12. | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு | | | |
| 12.1 | எல்லைகளிற்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| 13 | பொது வைப்புக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 13.1 | காலாவதியான வைப்புகள் தொடர்பாக நி.பி.571 இன் பிரகாரம் செயற்பட்டிருத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக் கணக்குகளிற்கான கட்டுப்பாட்டுக் கணக்கை நாளதுவரையாக்கி பராமரித்தல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **14** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி.371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்படாத வகையில் தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| **15.** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருத்தல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது நேரடியாக வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி.176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| **16.** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லைக்குள் பதவியணியைப் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டீ சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | பொது மக்களுக்கான தகவல் வழங்கல் | | | |
| 17.1 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்கப்பட்டிருப்பதுடன் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுமக்களின் பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை வழங்குதல் | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 ஆம் 10 ஆம் பிரிவின் படி ஒரு வருடத்தில் இரு முறை அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறை அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை இணக்கமானது/ இணக்கமற்றது | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினைத் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 18. | பிரஜைகள் பட்டயத்தைச் செயற்படுத்துதல் | | | |
| 18.1 | 05/2008 மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் சுற்றறிக்கையின் படி பிரஜைகள்/ சேவை பெறுனர் சாசனத்தை உருவாக்கி செயற்படுத்துதல் | இணக்கமானது | | |
| 18.2 | அச் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் படி, பிரஜைகள்/ சேவை பெறுனர் சாசனத்தை உருவாக்கி செயற்படுத்துவதற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக நிறுவனத்தால் நடைமுறை ஒன்றை தயாரித்தல். | இணக்கமானது | | |
| **19.** | **மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 02/2018 ஆம் இலக்க இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சிச் சந்தர்ப்பங்களை மேற்குறித்த மனித வள திட்டத்தில் உறுதிப்படுத்தியிருத்தல். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்குறித்த சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் | இணக்கமற்றது | | அச் சுற்றறிக்கையில் இப் பகுதி இரத்துச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டுள்ள படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருத்தல். | | | செய்யப்பட்டுள்ளது. |
| 19.4 | மேற்குறித்த சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் படி, மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை விருத்தி செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பான பொறுப்புகளை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருத்தல். | இணக்கமானது | | |
| 20 | கணக்காய்வுப் பந்திகளிற்காக பதிலளித்திருத்தல் | | | |
| 20.1 | முன்னைய ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரிசெய்தல். | இணக்கமானது | | |